[17th March 1965

Medical opinion is that Pandian might have received a stone hit.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் முடிவு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முடிவு என்ன என்று தெரியவில்லை.

திரு. து. ப. அழகமுத்து : பொதுமக்கள் கிளர்ச்சி செய்து தகராறு செய்தார்கள் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், வழக்குபோடுவது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மீது மட்டும் ஏன் போடவேண்டும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் பொதுமக்கள் என்று சொல்லவில்லை. ஒரு கூட்டம் என்றுதான் சொன்னேன். யார் யார் அதில் ஈடுபட்டார்களோ அவர்கள் மீது வழக்கு போடப்பட்டது. இதில் திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்ட் அல்லது எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் வழக்கு போடப்பட்டிருக்கிறது. கட்சியைப் பார்த்துப் போடப்படவில்லை.

Official language

* 254 *Q.*—Sri S. J. Ramaswami : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any instructions have been received by this Government from the Centre in regard to the use of Hindi as official language; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. Bhaktavatsalam : (*a*) No.

(*b*) Does not arise.

ஆட்சிமொழிச் சட்டத் திருத்தம்

* 255 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

இந்திய அரசியல் மொழிச் சட்டத்தினை திருத்த வேண்டியதன் அவசியம் பற்றி மத்திய அரசுக்கு ஏதேனும் ஆலோசனை கூறப்பட்டதா ?

The Hon. Sri M. Bhaktavatsalam : No, Sir.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, அண்மையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலே ஆட்சிமொழிச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று நமது முதலமைச்சர் அவர்களால் ஆலோசனை கூறப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மொழிச் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, நிரந்தர இரு மொழிக் கொள்கையை வற்புறுத்த வேண்டுமென்றும், அந்த நிலைக்கு அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்பதறகு, நிபுணர்களைக் கலந்து ஆலோசித்தார்களா ?